தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19.12.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "ஆஸ்திரேலியாவில் உணவு பதப்படுத்துதலின் கல்விசார் மற்றும் வேலை வாய்ப்புகள்" என்ற தலைப்பில் சிறப்புரை

உணவு பதன் செய் பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், "ஆஸ்திரேலியாவில் உணவு பதப்படுத்துதலின் கல்விசார் மற்றும் வேலை வாய்ப்புகள்" என்ற தலைப்பில் சிறப்புரையை 18.12.2024 அன்று ஏற்பாடு செய்தது. ஆஸ்திரேலியா மெல்போர்ன் கோல்ஸ் குழுமம் செயல்பாட்டுத் தலைவர், திரு.ஆர். மோகன்ராஜ் அவர்கள் சிறப்புரை வழங்கினார். உணவு பதன் செய் பொறியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.எம்.பாலகிருஷ்ணன் வரவேற்புரை வழங்கினார். வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர், முனைவர்.அ.ரவிராஜ் சிறப்புரையை தொடர்ந்து, திரு.ஆர்.மோகன்ராஜ், உணவு பதப்படுத்தும் தொழில்சார்ந்த திறனை எவ்வாறு அதிகரிப்பது என்பது பற்றிய நுண்ணறிவுகளை வழங்கினார். மேலும் தொழில் முன்னேற்றம் அல்லது பல்வேறு துறைகளுக்கு இடையே நகர்வதற்கு உதவும் கூடுதல் நடைமுறை திறன்கள் மற்றும் அனுபவத்தை வலியுறுத்தினார். உணவு பதன் செய் பொறியியல்துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**